
கீழ்க்காணும் சூழலில் நீங்கள் எவ்வாறு துணிவுடன் செயல்படுவீர்கள், அதன் முக்கியத்துவம் என்ன என்பதை தேர்ந்தெடுத்து கோடிடவும்.




அண்டை வீட்டாரின் கண்ணாடியை உடைக்கும் சிறுவனின் செயலைப் பெற்றோர்களிடம் புகார் செய்தல். சிறுவனைக் கண்டித்தல்.

முக்கியத்துவம் : அண்டை அயலாரின் உடமைகளை பாதுகாத்தல். மீண்டும் இது போன்ற செயலைச் செய்யாமலிருக்கச் செய்தல்.

விளையாட்டு மைதானப் பொருள்களைச் சேதப்படுத்திய சிறுவனுக்கு துணிவுடன் கண்டித்து அறிவுரைக் கூறுவேன்.

முக்கியத்துவம் : விளையாட்டு மைதானப் பொருள்களைச் சேதப்படுத்தாது பொறுப்புடனும் பாதுகாப்பாகவும் பயன்படுத்த வேண்டும்.

**துணிவுடன் செய்தது:** பண்பற்ற செயலைப் புரிந்த அச்சிறுவனை நான் கண்டிப்பேன். வீசிய குப்பையை மீண்டும் எடுக்கச் சொல்வேன்.

**செயலின் முக்கியத்துவம்:** மீண்டும் இம்மாதிரியான செயலைச் செய்யாமலிருக்கச் செய்தல்.

முறையாக வைக்காத பொது தொலைப்பேசியை முறையாகவும் சரியாகவும் எடுத்து வைத்தல்.

முக்கியத்துவம் : பொது உடமைகளை முறையாகவும் பாதுகாப்பாகவும் பயன்படுத்துதல்.

LIVEWORKSHEETS

அண்டை அயலாரிடம் துணிவுடன் செயல்படும் போதுஏற்படும் மனவுணர்வுகளைத் தேர்ந்தெடுக்கவும்.

1. குடியிருப்பு கழகத்தின் பொது கூட்டத்தில் மகிழுந்து நிறுத்தும் இடத்தின் பாதுகாப்பைப் பற்றிய அதிருப்தியைக் கூறுகிறாய்; யாரும் அதற்கு செவிசாய்கவில்லை.

2. உன் அண்டை வீட்டில் புதரும் செடிகளும் மண்டியிருப்பதனால் பாம்பு போன்ற பிராணிகள் வர வாய்ப்பு இருப்பதைக் கூறியவுடன், சரியான தீர்வு கண்டார் அண்டை வீட்டார்.

3. மேல் மாடியில் உலர வைத்த துணியிலிருந்து நீர் கொட்டுவதை எடுத்துக் கூறுகிறாய். மேல்வீட்டார் அதனை பொருட்படுத்தவில்லை.

4. பாதுகாப்பு இன்றி சுற்றி திரியும் வளர்ப்பு பிராணிகளைப் பராமரிக்கும் அமைப்பிடம் ஒப்படைக்குமாறு நீ கூறிய கருத்தினை அனைவரும் ஏற்றுக் கொண்டனர்.













LIVEWORKSHEETS